சுருக்கம்

வேலைவாய்ப்பு அலுவலக நடைமுறைகள் – 2011, 2012 மற்றும் 2013–ஆம் ஆண்டுகளில் பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி2) துறை

அரசாணை (டி) எண். 584

நாள். 08.12.2014
கார்த்திகை 22,
திருவள்ளுவர் ஆண்டு 2045
படிக்கவும்:-

1) அரசாணை (டி) எண்.320, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 19.07.2012.
2) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடித எண்.பப1/20289/2014, நாள்.23.7.2014.

-----

ஆணை:

11.07.2014 அன்று தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் மானியக் கோரிக்கை 32–ன் மீது விவாதம் நடைபெறும்போது மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 2014–2015–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் வரிசை எண். 5–ல், "2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை பல்வேறு காரணங்களினால் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்களுக்கு சிறப்பு புதுப்பித்தல் சலுகை" என்ற பொருளில் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார் :-

"2011, 2012 மற்றும் 2013–ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை பல்வேறு காரணங்களினால் புதுப்பிக்கத் தவறிய பதிவுதாரர்கள் தங்களின் பதிவு மூப்பினை மீளப்பெறவும், அதன் மூலம் வேலைவாய்ப்பினைப் பெற்றிட உதவிடும் வகையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, 2014–2015–ஆம் ஆண்டில் சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்கப்படும். இதனால் சுமார் 1 இலட்சம் பதிவுதாரர்கள் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது".

2. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், மேலே 2–ல் படிக்கப்பட்ட 23.7.2014 நாளிட்ட கடிதத்தில் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினை 2011, 2012 மற்றும் 2013–ஆம் ஆண்டுகளில் பதிவு புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகை வழங்க ஒரு கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். அதனை அரசு பரிசீலனை செய்தது.

(த.பி.பா)

3. மேற்கண்ட அறிவிப்பின்படி தமிழ்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பகங்களில் 2011, 2012 மற்றும் 2013–ஆம் ஆண்டுகளில் 01.01.2011 முதல் 31.12.2013 வரை வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவினைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு சிறப்புப் புதுப்பித்தல் சலுகையை வழங்கலாம் எனவும், இச்சலுகையைப் பெற விரும்பும் நபர்கள், அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆன்லைன் மூலமாகவோ மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவோ தங்கள் பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

4. மேலே கண்ட இவ்வாணை பற்றிய விவரங்களை முன்னிலையில் உள்ள இரண்டு தமிழ் நாளிதழ்களில் வெளியிடுவதுடன், அனைத்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தகவல் பலகையில் **(Notice Board in Employment Exchanges)** பொது மக்களின் தகவலுக்காக வைக்க அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மா.வீர சண்முக மணி
அரசு செயலாளர்.

பெறுநர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், கிண்டி, சென்னை–600 032.
தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை – 9.
அனைத்துத்துறைத் தலைவர்கள்.
அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
செயலாளரின் தனிச்செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அநமு–II) துறை, சென்னை–9.
✓ கணிணிப் பிரிவு பொறுப்பாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
அனைத்துப் பிரிவுகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை– 9.
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / சுத்த நகல் கோப்புக்கு / உதிரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

மா. பரிமளா
8/12/2014
பிரிவு அலுவலர்.
இராஜி
8/12/2014